# நீண்டகால அதிகாரப் பத்திரத்திற்கு ஒரு வழிகாட்டி

OFFICE OF THE
PUBLIC
GUARDIAN

# பொருளடக்கம்


முன்னுரை **03**

பகுதி **A** **மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் அதைப்பற்றி நான் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்?** **04**

A1. மனநலத்திறன் என்றால் என்ன? 04

A2. மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நமக்கு ஏன் இந்த சட்டம் தேவைபடுகிறது? 05

A3. பொது காப்பாளர் அலுவலகம் என்ன செய்யும்? 06

பகுதி **B** **நீண்டகால அதிகாரப் பத்திரம்** **08**

B1. நீண்டகால அதிகாரப் பத்திரம் என்பது என்ன? 08

B2. யார் என்னுடைய டோனி ஆகலாம்? 09

B3. எனக்கு எத்தனை டோனிகள் இருக்கலாம்? 09

B4. எனக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட டோனிகள் இருந்தால், என்னை பற்றிய காரியங்களைக் குறித்து என் சார்பாக அவர்கள் எவ்வாறு முடிவெடுப்பார்கள்? 10

B5. டோனிகள் எத்தகையான முடிவுகள் செய்யலாம்? 10

B6. கட்டுப்பாடுகள் 14

B7. தடை செய்யப்பட்ட முடிவுகள் 15

| | | |
|---|---|---|
| பகுதி **C** | **நீண்டகால அதிகாரப் பத்திரம் செய்ய வேண்டும் என்று நான் முடிவெடுத்தால் நான் என்ன செய்யவேண்டும்?** | **16** |
| | C1. என் நீண்டகால அதிகாரப் பத்திரத்தை (LPA) நான் எவ்வாறு செய்வது? | 16 |
| | C2. இதை செய்வதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் | 17 |
| | C3. எல்பிஏ (LPA) பதிவு செய்த பின்னர் செய்ய வேண்டியன | 18 |
| | C4. எல்பிஏ(LPA)–இல் பெயர் குறிப்பிட்ட நபர் இருப்பதன் காரணம் என்ன? | 19 |
| | C5. என்னுடைய டோனியாக இருக்க ஒருவர் மறுக்கலாமா? | 19 |
| | C6. நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பதிவுச் செய்த பின்னர் நான் மனம் மாறினால் என்ன நடக்கும்? | 20 |
| | C7. எல்பிஏ(LPA) செய்வதற்கான கட்டணங்கள் என்ன? | 20 |
| பகுதி **D** | **மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள 5 நெறிகள் யாவை மற்றும் அவற்றை நாம் எவ்வாறு செயல்படுத்துவது?** | **21** |
| பகுதி **E** | **எல்பிஏ – யை (LPA) பதிவுச் செய்ய மாதிரி செயல்முறை சரிபார்த்தல் பட்டியல்** | **30** |
| | விளக்கச் சொற்கள் | 31 |

# முன்னுரை

இச்சிற்றேடு நீண்டகால அதிகாரப் பத்திரம் (எல்பிஏ – LPA) என்பது என்ன என்பதையும் அப்படி ஒன்றை நீங்கள் செய்ய விரும்பினால் என்னென்ன செய்யவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள ஒரு சுருக்கமான விவரிப்பை வழங்குகிறது.

இந்த வழிகாட்டியில் உள்ள கற்பனை காட்சி அமைப்புகளும் உதாரணங்களும் வெறும் விளக்கமளிக்க உதவும் எடுத்துக்காட்டுகள் மட்டுமே. அவை கற்பனை கதாபாத்திரங்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்துகின்றன. அவை ஏற்ற வழக்குகளுக்கான தொழில்முறை நிபுணத்துவ ஆலோசனைக்கு பதிலானவை அல்ல. அதோடு ஒரேமாதிரியான சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளுக்கு எந்த வகையிலும் இவை முன்னோடி முடிவுகளும் அல்ல. அவை எந்த ஒரு வழக்கிலும் ஒரு நீதிமன்றம் எவ்வாறு முடிவெடுக்கும் என்று சுட்டிக்காட்டுபவையும் அல்ல. ஏனெனில், நீதிமன்ற முடிவு நீதிமன்றத்தின் முன் உள்ள வழக்கின் உண்மை விவரங்களைச் சார்ந்திருக்கும். அதோடு, உதாரணங்களில் விவரிக்கப்படாத ஆனால் வழக்கிற்கு தொடர்புள்ள விவரங்களும் அதில் உள்ளடங்கலாம்.

# பகுதி A

## மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் அதைப் பற்றி நான் என்ன தெரிந்துக்கொள்ள வேண்டும்?

### A1. மனநலத்திறன் என்றால் என்ன?

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய ஒரு நபருக்குள்ள திறமையே மனநலத்திறன் என்பதாகும்.

மனநலதிறன் நபருக்கு நபர் வேறுபடும் என்ற அடிப்படையில் கணிக்கப்படுகிறதே தவிர, ஒருவர் ஒரு மருத்துவ குறைபாட்டினால் அவதியுறுகிறார் என்ற அடிப்படையில் யூகிக்கப்படக் கூடாது. மேலும், ஒருவரின் மனநலத்திறன் குறைபாட்டினை அவருடைய வயது, தோற்றம், நிலை அல்லது நடத்தை ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அல்லது எந்த ஒரு கூற்றையோ அடிப்படையாகக் கொண்டு கணிக்கக்கூடாது.

ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் சில முடிவுகள் எடுக்கும் திறனைப் பெற்று மற்ற முடிவுகளை எடுக்க இயலாமல் இருக்கலாம். உதாரணத்திற்கு, ஒரு நபர் சந்தைக்குச் சென்று உணவு வாங்கலாம். ஆனால், அதிக தொகையுள்ள பணத்தையோ அல்லது முதலீடு முடிவுகளையோ சமாளிக்க முடியாமல் இருக்கலாம். மனநலத்திறன் காலவோட்டத்தில் தேரலாம் அல்லது மோசமடையலாம்.

## A2. மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நமக்கு ஏன் இந்த சட்டம் தேவைபடுகிறது?

மனநலத்திறன் சட்டம் மக்கள் தங்களின் மனநலத்திறனை இழப்பதற்கு முன்பே முன்னோக்கி திட்டமிடுவதைச் சாத்தியமாக்குவதுடன் தங்களின் எதிர்காலத்திற்காக விருப்பத்தேர்வுகள் செய்யும் ஆற்றலையும் வழங்குகிறது. 21 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்கள் மனநலத்திறனை இழக்கும் தருவாயில், சுயமாக முடிவுகள் எடுக்க முடியாத நிலையில் அவர்களின் சார்பாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய தேவையை அது பூர்த்திச் செய்கிறது. இந்த சட்டம் மேலும்:

a. எதிர்காலத்தில் மக்கள் மனநலத்திறனை இழந்துவிட்டாலோ அல்லது இழக்கும் போதோ அவர்களின் சார்பாக செயல்படவும், முடிவுகள் எடுக்கவும் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களை (டோனிகள்) நியமிக்க ஒரு நீண்டகால அதிகாரப்பத்திரத்தைத் தன்னிச்சையாக செய்ய அனுமதி அளிக்கிறது.

b. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவர் முடிவு எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு ஆனால் அவரின் சார்பாக முடிவெடுக்கும் பிரதிநிதி இல்லாத சூழ்நிலையில், அவர் சார்பாக செயல்படவும் மற்றும் முடிவுகள் எடுக்கவும் நீதிமன்றம் ஒரு துணை அறங்காவலரை (டெப்யூடி) நியமிக்க அனுமதிக்கிறது.

c. அறிவாற்றல் குன்றிய பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு துணை அறங்காவலரை நியமிக்க நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்ய அனுமதி வழங்குகிறது.

d. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் பராமரிப்பு மற்றும் சிகிச்சையின் தொடர்பாக எவரேனும் செயல்படும் போது, அச்செயல்கள், அந்த நபரின் மிகச் சிறந்த நலனை முன்னிட்டும் அதோடு சில நிபந்தனைகளுக்கு கட்டுபட்டும் செய்யப்படுபவை என்றால் அவற்றுக்கு சட்ட பாதுகாப்பு வழங்குகிறது.

e. மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களுக்குப் பாதுகாவல்கள் வழங்குகிறது.

## A3. பொது காப்பாளர் அலுவலகம் என்ன செய்கிறது?

### பொது காப்பாளர்

மனநலத்திறன் குறைபாடுடன் எளிதில் பாதிக்கப்படக்கூடிய தனி நபர்களின் கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொது காப்பாளர் செயல்படுகிறார். அவர் பொது காப்பாளர் அலுவலகத்தின் தலைவரும் ஆவார்.

### பொது காப்பாளரின் பணிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள நபர்களுக்கு அதிகாரம் மற்றும் பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் பொது காப்பாளர் பலதரப்பட்ட பணிகளை மேற்கொள்கிறார். இப்பணிகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:

a. நீண்ட கால அதிகாரப் பத்திரங்களுக்கான ஒரு பதிவேட்டையும் துணை அறங்காவலர்களை நியமிக்கும் நீதிமன்ற ஆணைகளுக்கான ஒரு பதிவேட்டையும் பேணுவது.

b. துணை அறங்காவலர்களை (டெப்யூடிகளை) மேற்பார்வை செய்வது,

c. அறங்காவலர்கள்(டோனி) மற்றும் துணை அறங்காவலர்களிடமிருந்து (டெப்யூடி) அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது.

d. மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடு ஏதேனும் மீறப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டை விசாரிப்பது. இதில் அறங்காவலர்களும் (டோனி) துணை அறங்காவலர்களும் (டெப்யூடி) தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் முறையைக் குறித்த புகார்களும் அடங்கும்.

### பொது காப்பாளர் அலுவலகம்

- பொது காப்பாளர் அலுவலகம் (OPG) பொது காப்பாளர் தன் பணிகளை மேற்கொள்ள ஆதரவளிக்கிறது.

- OPG சமூக வளர்ச்சி, இளையர் மற்றும் விளையாட்டு அமைச்சின் ஒரு பிரிவாகும்.

### வருகையாளர்கள் குழுவின் பங்கு

வருகையாளர்கள் குழுவின் பங்கு பின்வருமாறு:

- பொது காப்பாளரின் அல்லது நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களையும், டோனிகளையும் மற்றும் டெப்யூடிகளையும் சென்று பார்பபது மற்றும்

- மனநலத்திறன் குறைபாடுள்ள நபரின் நலனைக் கண்டறிவது.

2 வகை வருகையாளர்கள் உள்ளனர்:

a. சிறப்பு வருகையாளர்கள் – பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் அல்லது, மன அல்லது மூளை செயல்பாட்டில் ஏற்படும் சேதம் அல்லது பிறழ்வு போன்றவற்றைக் குறித்து தகுந்த நிபுணத்துவம் உள்ளவர்கள்.

b. பொது வருகையாளர்கள் – மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதில்லை.

# பகுதி B

## நீண்டகால அதிகாரப் பத்திரம்

### B1. நீண்டகால அதிகாரப் பத்திரம் என்றால் என்ன?

நீண்டக்கால அதிகாரப் பத்திரம் ( LPA ) ஒரு சட்டப்பூர்வமான பத்திரமாகும். மனநலத்திறன் உள்ள மற்றும் 21வயது அல்லது அதற்கும் கூடுதலான வயதுள்ள நபர் ஒருவர் (டோனர் எனப்படுபவர்), எதிர்காலத்தில் தனக்கு மனநலத்திறனில் குறைபாடு ஏற்படும் போது, அவர் ஒரு நபர் அல்லது நபர்களை (டோனீ/டோனிகள் எனப்படுபவர்கள்) தன்னிச்சையாக நியமிக்கலாம். தன் சுய நலனைப்பற்றிய விவகாரங்கள், சொத்து & அலுவல் பற்றிய விவகாரங்கள் அல்லது இவ்விரண்டு விவகாரங்களையும் குறித்து தன் சார்பில் டோனி/டோனிகள் முடிவுகள் எடுக்கவும் செயல்படவும், இந்த நீண்டகால அதிகாரப் பத்திரம் அனுமதிக்கும்.

டோனர் ஒருவர் தன் மன நல திறனை இழக்கும் போது, பொதுவாக பயனிழந்துப் போகும் அதிகாரப் பத்திரத்தைப் போன்று அல்லாது, ஒரு டோனர் அத்திறனை இழக்கும் போது தான் LPA நடப்பிற்கு வரும். இது போன்ற சாத்தியமான நிகழ்வுகளை முன்னிட்டு திட்டமிட இந்த LPA அனுமதிக்கும்.

டோனர் தன் மனநலத்திறனை இழந்த பிறகே LPA – யின் கீழ் டோனிக்கு வழங்கப்படும் அதிகாரம் நடப்பிற்கு வரும்.

வெவ்வேறான தேவைகளுக்கேற்ப LPA – யில் 2 குறிப்பிடப்பட்ட பாரங்கள் உள்ளன:

- OPG (ஒபீஜி) பாரம் 1, LPA - யில் உள்ள ஒரு பாரமாகும். உங்கள் விவகாரங்கள் அனைத்திற்கும் உங்கள் சார்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை நீங்கள் உங்கள் டோனிக்கு அல்லது டோனிகளுக்கு வழங்க விருப்பப்பட்டால், நீங்கள் இந்த பாரத்தைப் பயன்படுத்தலாம். பின்வரும் விவகாரங்கள் குறித்து உங்கள் டோனி/டோனிகளிடத்தில் அதிகாரம் வழங்க நீங்கள் தெரிவு செய்யலாம்:
  - உங்கள் சுயநலன் (சுகாதார பராமரிப்பு உள்பட), அல்லது
  - உங்கள் சொத்து & அலுவல்கள் (நிதி விவகாரங்கள் உள்பட), அல்லது
  - உங்கள் சுயநலன் மற்றும் சொத்து & அலுவல்கள் ஆகிய இரண்டும்.
- உங்கள் LPA - யில் இன்னும் அதிகமான தேவைகளை நீங்கள் சேர்க்க இருந்தால் OPG (ஒபீஜி) பாரம் 2- ஐ பயன்படுத்தவும், எடுத்துக்காட்டாக, உங்கள் டோனிக்கு குறிப்பிட்ட அதிகாரங்களை நீங்கள் வழங்க விரும்பினால். அந்த LPA - யைச் செய்ய நீங்கள ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டும்.

OPG (ஒபீஜி) பாரம் 1- ஐ நீங்களாகவே பூர்த்திச் செய்யலாம். ஆனால் உங்கள் டோனி/டோனிகளிடத்தில் இத்தகைய அகன்ற அதிகாரங்களைக் வழங்குவதன் உட்கருத்து என்னவென்று நீங்கள் அறியாவிட்டாலோ அல்லது இப்பாரத்தைப் பூர்த்தி செய்வதில் உங்களுக்கு ஐயம் ஏற்பட்டாலோ நீங்கள் ஒரு வழக்கறிஞரை கலந்தாலோசிக்க வேண்டும். இந்த பாரங்களை www.publicguardian.gov.sg என்ற இணைய தளத்திலிருந்து எடுக்கலாம்.

## B2. யார் எந்தன் டோனி ஆகலாம்?

உங்கள் டோனி நம்பிக்கைக்குரியவராகவும், பொறுப்புள்ளவராகவும், உங்களுக்கு முடிவுகளை எடுக்க தகுதி வாய்ந்தவருமாக இருக்க வேண்டும்.

ஒரு டோனி குறைந்தது 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

சுய நலனைப்பற்றி முடிவுகள் எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட டோனி ஒரு தனி நபராக இருக்க வேண்டும்.

சொத்து & அலுவல்கள் குறித்து முடிவுகள் எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு டோனி :

- ஒரு தனி நபராக இருக்கலாம் (ஆனால் அவர் நொடித்தவராக இருக்கக் கூடாது), அல்லது
- பொறுப்பாண்மை நிறுவனங்கள் சட்டத்தின்படி உரிமம் பெற்ற ஒரு பொறுப்பாண்மை நிறுவனமாக இருக்கலாம்.

## B3. எனக்கு எத்தனை டோனிகள் இருக்கலாம்?

நீங்கள் ஒன்று அல்லது அதற்கும் அதிகமான டோனிகளை நியமிக்கலாம். நீங்கள் நியமிக்கக்கூடிய டோனிகளின் எண்ணிக்கையில் உச்ச வரம்பு எதுவுமில்லை.

ஆனால் நீங்கள் அதிகமான டோனிகளை நியமித்தால், அவர்கள் ஒருமனதாக முடிவுகளை எடுப்பதற்கு சிரமத்தை எதிர் நோக்கலாம். டோனிகளுடன் அலுவல் வைத்திருப்பவர்கள், எந்த டோனியுடன் அலுவல் வைத்திருக்க வேண்டுமென்றும், எவருடைய முடிவை ஏற்றுக் கொள்வதென்றும் குழப்பம் அடையலாம். நீங்கள் டோனிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, ஒற்றுமையாகச் செயல்படக்கூடியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காரணம், கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது அவை முடக்கங்கள் ஏதுமின்றி சுமூகமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

## B4. எனக்கு ஒன்றுக்கும் அதிகமான டோனிகள் இருந்தால், என் விவகாரங்கள் குறித்து என் சார்பில் அவர்கள் எவ்வாறு முடிவெடுப்பார்கள்?

ஒரே விவகாரத்தைக் குறித்து முடிவெடுக்க நீங்கள் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான டோனிகளை நியமித்திருந்தால், பின்வரும் வழிகளில் அவர்கள் செயல்படுமாறு நீங்கள் அவர்களை நியமிக்கலாம்:

- **கூட்டாக:** டோனிகள் ஒன்றுச் சேர்ந்து செயல்பட வேண்டும். தனி தனியாக இயங்கக் கூடாது.
- **கூட்டாகவும் தனி தனியாகவும் :** டோனிகள் ஒன்றுச் சேர்ந்து அல்லது தனி தனியாக முடிவெடுக்கலாம். இருவகை முடிவுகளும் செல்லுபடியானவை.
- **சில விவகாரங்கள் பற்றி கூட்டாகவும் மற்றவை குறித்து கூட்டாகவும் தனி தனியாகவும்:** சில விவகாரங்கள் குறித்து, எடுத்துகாட்டாக குடியிருப்பு சொத்து விற்பனை போன்ற விவகாரங்கள் குறித்து டோனிகள் கூட்டாக செயல்படலாம். ஆனால், மற்ற விவகாரங்களில், எடுத்துகாட்டாக குடும்ப செலவிற்கான கட்டணங்களை செலுத்துதல் போன்ற விவகாரங்கள் குறித்து தனித் தனியாக செயல்படலாம்.

நீங்கள் இரண்டுக்கும் அதிகமான டோனிகளை நியமித்து அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று குறிப்பிடாவிட்டால், சட்டபடி அவர்கள் கூட்டாகவே செயல்பட வேண்டும் என்று கருதப்படும்.

சில முடிவுகள் சுய நலன் மற்றும் சொத்து & அலுவல்கள் ஆகிய இரண்டும் தொடர்புடையதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, டோனர் தாதிமை இல்லத்தில் வசிப்பாரா, இல்லை வீட்டில் தங்கும் தாதியைப் பணியில் அமர்த்துவதா என்ற முடிவு, டோனரின் சுய நலனையும் மேலும் இச்சேவைகளுக்கு பணம் செலுத்த டோனரின் நிதியை பயன்படுத்துவதைப் பற்றியும் உள்ளது.

சுயநலனுக்கான முடிவுகளை எடுக்கும் டோனியே சொத்து & அலுவல்களுக்கான முடிவுகளையும் எடுப்பார் என்றால், அதே நபர் இந்த முடிவுகளைச் செய்யலாம்.

டோனிகள் வெவ்வேறாயின், முடிவுகளை எடுக்கும் போது அவை டோனரின் மிகச் சிறந்த நலனுக்காகவே அமைந்துள்ளனவா என்பதை உறுதி படுத்த டோனிகள் ஒன்றுகூடி பாடுப்பட வேண்டும்.

## B5. எந்த வகையான முடிவுகளை டோனிகள் எடுக்கலாம்?

உங்கள் டோனி எடுக்கக் கூடிய முடிவுகள், உங்கள் LPA – யில் உங்கள் டோனிக்கு நீங்கள் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பொருத்தேயுள்ளது.

கீழ் காணப்படும் காரியங்கள் குறித்து முடிவெடுக்க உங்கள் டோனிக்கு நீங்கள் அதிகாரம் வழங்கலாம்:

a. உங்கள் சுய நலன் (சுகாதார பராமரிப்பு காரியங்கள் உள்பட), அல்லது

b. உங்கள் சொத்து & அலுவல்கள் (நிதி காரியங்கள் உள்பட), அல்லது

c. உங்கள் சுய நலன் மற்றும் உங்கள் சொத்து & அலுவல்கள் ஆகிய இரண்டும்.

### சுய நலனுக்கான டோனி

சுய நலனுக்கான டோனிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி அவர் எடுக்கக் கூடிய முடிவுகளின் சில எடுத்துக்காட்டுகள்:

- டோனர் வாழும் இடம்,
- டோனர் யாருடன் வாழவேண்டும்,
- அன்றாட பராமரிப்பு முடிவுகள் (எ.கா. என்ன ஆடை அணிய, என்ன சாப்பிட),
- எந்த சமூக நடவடிக்கைகளில் பங்கெடுக்க,
- டோனருடைய கடித போக்குவரத்து கவனித்தல் மற்றும்,
- டோனர் எவருடன் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.



கீழ் காணப்படும் சூழ்நிலைகளில் சுய நலனுக்கான டோனியின் நியமனம் இரத்துச் செய்யப்படும்:

- டோனி இறந்தால்,
- டோனியின் நியமனம் இரத்துச் செய்யப்படாதென்று LPA –யில் குறிப்பாக வழி வகுக்கப்பட்டிருந்தாலேயன்றி டோனருக்கும் டோனிக்கும் நடந்த திருமணம் கலைக்கப்பட்டால் (அதாவது விவாகரத்தானால்) அல்லது திருமன பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டால்,
- டோனி முறையாக தன் டோனி நியமனத்தை மறுத்தால், அல்லது
- டோனிக்கு மன நலத்திறன் குன்றியிருந்தால்.

ஆனால், அதே LPA – யின் கீழ் மாற்று டோனி நியமிக்கப்பட்டாலோ அல்லது எஞ்சியுள்ள ஒன்று அல்லது அதற்கும் அதிகமான டோனிகள் எந்த காரியத்தைக் குறித்தும், கூட்டாகவும் தனி தனியாகவும் செயல்பட நியமிக்கப்பட்டிருந்தாலோ, அந்த LPA இரத்தாகாமல் செல்லுபடியாகவே இருக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் அதிகமான டோனிகளை கூட்டாகச் செயல்படும்படி ஒரு LPA நியமித்திருந்து, அந்த டோனிகளில் ஒருவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டால், LPA வழங்கும் அதிகாரமும் இரத்துச் செய்யப்படும்.



## சொத்து & அலுவல்களுக்கான டோனி

சொத்து & அலுவல்களுக்கான டோனிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அவர் எடுக்கக் கூடிய முடிவுகளின் சில எடுத்துக்காட்டுகள்:

- டோனரின் சொத்தைக் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சொத்தை வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல் மற்றும் அடைமானம் வைத்தல்,
- டோனரின் வங்கி கணக்குகளை திறப்பது, மூடுவது மற்றும் இயக்குவது,
- டோனரின் சார்பில் இலாபப்பங்கு, வருமானம், மரபுரிமை சலுகைகள் அல்லது மற்ற நிதி உரிமை தொகைகளை பெற்றுக் கொள்வது,
- டோனரின் வரி தொடர்பான காரியங்களைக் கவனித்தல்,
- டோனரின் வாடகையைச் செலுத்துதல், வீட்டுக் கடனைத் திரும்பச் செலுத்துதல் மற்றும் அவர் குடும்பச் செலவுகளைக் கவனித்தல்,
- டோனரின் நிதியை முதலீடுச் செய்தல், மற்றும்
- டோனருக்கு வாகனம் அல்லது தேவைபடும் கருவிகளை வாங்குதல்.



கீழ் காணப்படும் சூழ்நிலைகளில் சொத்து & அலுவல்களுக்கான டோனியின் நியமனம் இரத்துச் செய்யப்படும்:

- டோனர் நொடித்துப்போனால் அல்லது இறந்துவிட்டால்,
- டோனி (ஒரு தனி நபர்) இறந்தால் அல்லது நொடித்துப் போனால்,
- டோனி உரிமம் பெற்ற ஒரு பொறுப்பாண்மை நிறுவனமாக இருந்து அதன் உரிமம் காலாவதியானால் அல்லது இரத்துச் செய்யப்பட்டால்,
- டோனி (உரிமம் பெற்ற ஒரு பொறுப்பாண்மை நிறுவனம்) கலைக்கப்பட்டால், மூடப்பட்டால், கலைத்தலின் இறுதிக் கட்டத்தில் இருந்தால் அல்லது நீதிமன்ற நிர்வாகத்தின் கீழ் இருந்தால்,
- டோனியின் நியமனம் இரத்துச் செய்யப்படாதென்று LPA –யில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டாலேயன்றி டோனருக்கும் டோனிக்கும் நடந்த திருமணம் கலைக்கப்பட்டால் (அதாவது விவாகரத்தானால்) அல்லது திருமன பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டால்,
- டோனி முறையாக தன் டோனி நியமனத்தை மறுத்தால், அல்லது
- டோனிக்கு மன நலத்திறன் குன்றியிருந்தால்.

ஆனால், அதே LPA – யின் கீழ் மாற்று டோனி நியமிக்கப்பட்டால் அல்லது எஞ்சியுள்ள ஒன்று அல்லது அதற்கும் அதிகமான டோனிகள் எந்தவொரு காரியத்தைக் குறித்தும் கூட்டாகவும் தனி தனியாகவும் செயல்பட நியமிக்கப்பட்டிருந்தால், அந்த LPA இரத்தாகாமல் செல்லுபடியாகவே இருக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் அதிகமான டோனிகளை கூட்டாகச் செயல்படும்படி ஒரு LPA நியமித்திருந்து, அந்த டோனிகளில் ஒருவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டால், LPA வழங்கும் அதிகாரமும் இரத்துச் செய்யப்படும்.

நீங்கள் டோனி எடுக்கக் கூடிய முடிவுகளின் வரம்பிற்கு தடை விதிக்கலாம் அல்லது சில வகை முடிவுகள் எடுக்கப்படக்கூடாதெனவும் தடை விதிக்கலாம், எ.கா. சொத்து & அலுவல்கள் விவகாரங்களுக்கு டோனியை நியமிக்கும் போது, அவர் முதலீடுகளைப் பற்றிய முடிவுகளை எடுக்கக் கூடாது என்று டோனர் LPA – யில் குறிப்பிடலாம்.

உங்கள் டோனி எடுக்கக்கூடிய முடிவுகளில் தடை விதிக்க நீங்கள் விரும்பாவிட்டால், ஒபீஜி (OPG) பாரம் 1 –இல் ஆன LPA– யை நீங்கள் செய்யலாம். இந்த LPA – யின் படி சுய நலனுக்கு அல்லது/ மற்றும் சொத்து & அலுவல்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் டோனிக்கு, உங்கள் சார்பில் பல தரப்பட்ட முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை வழங்குகிறது.

உங்கள் சுய நலனைக் குறித்து முடிவெடுக்க உங்கள் டோனி நியமிக்கப்பட்டிருந்தால், அவருக்கு உங்கள் சொத்து & அலுவல்கள் பற்றியும் முடிவெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலேயன்றி, அவர் உங்கள் நிதி விவகாரங்களைக் குறித்து முடிவெடுக்க முடியாது.

உங்கள் சொத்து & அலுவல்களைக் குறித்து முடிவெடுக்க உங்கள் டோனி நியமிக்கப்பட்டிருந்தால், அவருக்கு உங்கள் சுய நலனைப் பற்றியும் முடிவெடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலேயன்றி, அவர் உங்கள் நலனைக் குறித்து முடிவெடுக்க முடியாது.

டோனிகள் செய்யக் கூடியவற்றில் சில தடைகள் உண்டு. மேலும் டோனிகள் எடுக்கக் கூடாதென தடை விதிக்கப்பட்ட முடிவுகளும் உள்ளன.

## B6. கட்டுபாடுகள்

### பொது கட்டுபாடுகள்

ஒரு முடிவைச் செய்வதற்கான திறன் உங்களுக்கு உண்டு என்று உங்களுடைய டோனிக்கு தெரிந்திருந்தால் அல்லது அவ்வாறு நம்புவதற்கு உங்கள் டோனிக்கு நியாயமான காரணங்கள் உண்டென்றால், அவர் உங்கள் சார்பில் ஒரு முடிவை எடுக்கக்கூடாது.

### வரையறுக்கப்பட்ட கட்டுபாடுகள்

உங்கள் டோனி செய்யக் கூடாதவை பின் வருமாறு:

a. உங்கள் LPA – யில் உங்கள் டோனிக்கு திட்டவட்டமாக நீங்கள் அதிகாரம் அளித்திருந்தாலேயன்றி, உங்களுக்கு சுகாதார பராமரிப்பு சிகிச்சை (மருத்துவமனை சார்ந்த சோதனை ஆய்வுகள் நடத்தப்படுவது உள்பட) அளிப்பதற்கு அல்லது தொடர்வதற்கு சம்மதம் தெரிவிக்கவோ அல்லது மறுக்கவோ கூடாது.

b. உயிர்– நீடிப்பு சிகிச்சை அல்லது உங்கள் உடல் நிலை மேலும் மோசமடைவதை தடுக்கத் தேவைபடும் வேறு எந்த சிகிச்சைக்கும் சம்மதம் தெரிவிக்கவோ அல்லது மறுக்கவோ கூடாது.

c. உங்களுக்காக ஒரு உயிலை நிறைவேற்றக்கூடாது.

d. உங்களுக்காக மத்திய சேமநிதி (CPF) அல்லது காப்புறுதி நியமனம் ஏதேனும் செய்யவோ அல்லது அதை இரத்துச் செய்யவோ கூடாது.

e. உங்கள் LPA – யில் நீங்கள் திட்டவட்டமாய் அவருக்கு அதிகாரம் அளித்திருந்தாலேயன்றி, உங்கள் சொத்து எதிலிருந்தும் அவர் அன்பளிப்பு வழங்கக்கூடாது.

f. பின்வரும் சூழ்நிலைகளைத் தவிர்த்து உங்களை அடக்கும் எந்த செயலையும் புரியக்கூடாது:

- நீங்கள் திறன் குறைபாடுமிக்கவரென்றும் உங்களுக்கு ஏற்படக்கூடிய தீங்கைத் தடுக்க அடக்குமுறை அவசியமென்றும் டோனி நம்பினால் அல்லது அவ்வாறு நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணங்கள் இருந்தால்; மற்றும்

- அடக்குமுறை செயல் உங்களுக்கு நேரக்கூடிய தீங்கிற்கும் அந்த தீங்கின் கடுமைக்கும் ஏற்புடைய பதில் செயலாக இருக்க வேண்டும்.

## B7. தடை செய்யப்பட்ட முடிவுகள் யாவை?

உங்கள் டோனி உங்கள் சார்பாக எடுப்பதற்கு சட்டப்படி அனுமதிக்கப்படாத சில முடிவுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| a. | திருமணத்திற்குச் சம்மதிப்பது. |
| b. | பாலியல் ரீதியில் தொடுவதைச் சம்மதிப்பது. |
| c. | 3-வருடங்கள் பிரிந்திருந்த அடிப்படையில் விவாகரத்துக்குச் சம்மதிப்பது. |
| d. | ஒரு தத்தெடுப்பு ஆணையைச் செய்வதற்குச் சம்மதிப்பது. |
| e. | ஒரு மதத்தை ஏற்கவோ துறக்கவோ சம்மதிப்பது. |
| f. | பாலினத்தை மாற்றும் சிகிச்சையை பெறுவது. |
| g. | கருத்தடைச் சிகிச்சைக்குச் சம்மதிப்பது அல்லது கொடுத்த சம்மதத்தை மீட்டுக் கொள்வது. |
| h. | கருச்சிதைவுக்குச் சம்மதிப்பது அல்லது கொடுத்த சம்மதத்தை மீட்டுக் கொள்வது. |
| i. | மரணத்திற்குப் பிறகு எந்த ஒரு நபரிடமிருந்தும் ஓர் உறுப்பை அகற்றுவதைக் குறித்த எதிர்ப்பைப் பதிவு செய்வது அல்லது எதிர்ப்பை மீட்டுக்கொள்வது. |
| j. | முன் ஏற்பாடாய் அமையும் ஒரு மருத்துவ கட்டளையைத் தயார் செய்வது அல்லது அதை இரத்துச் செய்வது. |
| k. | ஓர் உடலையோ அல்லது உடலின் ஒரு பாகத்தையோ அன்பளிப்பென்று கொடுப்பது அல்லது அதை மீட்டுக் கொள்வது. |

## பகுதி C

**நீண்டகால அதிகாரப் பத்திரம் செய்ய நான் முடிவெடுத்தால் நான் என்ன செய்யவேண்டும்?**

### C1. நீண்டகால அதிகாரப் பத்திரத்தை நான் எவ்வாறு செய்வது?

**படி 1:**

உங்கள் எல்பிஏ(LPA) பாரத்தை பூர்த்தி செய்யவும்.
["நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பூர்த்தி செய்வது எப்படி" என்ற வழிகாட்டி ஏட்டை தயவுசெய்து பார்க்கவும்]

**படி 2:**

உங்கள் எல்பிஏ(LPA)–யில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்/நபர்களிடம் LPA–யை பதிவு செய்ய நீங்கள் எடுத்திருக்கும் முடிவைப் பற்றி தெரிவியுங்கள் (C4 பத்தியை பார்க்கவும்).

**படி 3:**

பொது காப்பாளர் அலுவலகத்தில் (ஓபிஜி) உங்கள் LPA– யை நீங்கள் பதிவு செய்யவேண்டும்.
கீழ் குறிப்பிடப்பட்டவையை நீங்கள் செய்யவேண்டும்:

a. LPA -யை பதிவு செய்ய ஒரு விண்ணப்ப பாரத்தை பூர்த்தி செய்யவும்

b. கீழ்கண்டவையைக் கொண்டுவரவும்

- பூர்த்தி செய்யப்பட்ட எல்பிஏ விண்ணப்பப் பாரம்
- பூர்த்தி செய்யப்பட்ட எல்பிஏ
- டோனரின் அடையாள அட்டை (அசல்)
- டோனிகளின் அடையாள அட்டைகள் (அடையாள அட்டைகளின் முன் மற்றும் பின்பக்கங்களின் பிரதிகள்)
- ஒவ்வொரு டோனியின் பாஸ்போர்ட் அளவு புகைபடம் ஒன்று
- பதிவு கட்டணத்தைச் செலுத்தவும்.

நீங்கள் ரொக்கமாக, நெட்ஸ், கடன் அட்டை வழி (விசா அல்லது மாஸ்டர் கார்ட்) அல்லது உள்நாட்டு நாணயத்தில் காசோலை வழி AG/MCYS என்ற கட்டணம் பெறுனருக்கு கட்டணத்தைச் செலுத்தலாம்.

**படி 4:**

6 வாரங்கள் காத்திருந்த காலகட்டத்தின் போது மறுப்புகள் இல்லையெனில் உங்கள் LPA பதிவுசெய்யப்படும். பதிவு செய்யப்பட்ட LPA –யில் OPG –யின் முத்திரை பதிக்கப்படும் . ஒவ்வொரு டோனிக்கும் சிறப்பு அடையாள எண் கொண்ட ஒரு டோனி அடையாள அட்டை கொடுக்கப்படும். ஒரு டோனியின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டால், அந்த டோனியின் சிறப்பு அடையாள எண்ணும் இரத்துச் செய்யப்படும்.

LPA பாரம் மற்றும் அதன் விண்ணப்பப் பாரம் இரண்டுமே பொது காப்பாளர் அலுவலகத்திலும் www.publicguardian.gov.sg என்ற இணைய பக்கத்திலும் கிடைக்கும்.

ஒரு LPA கீழ் குறிப்பிடப்பட்டவர்களால் பதிவுச் செய்யப்படலாம்

- டோனர்,
- டோனி அல்லது டோனிகள் (கூட்டாக செயல்படவேண்டும் என்று LPA நியமித்திருந்தால்), அல்லது
- கூட்டாகவும் தனி தனியாகவும் செயல்படவேண்டும் என்று LPA நியமித்திருந்தால், டோனிகளில் யாரேனும் ஒருவர்

அன்புகூர்ந்து கவனிக்கவும்:

- உங்களுக்கு குறைந்தது 21 வயதாக இருக்க வேண்டும் அத்துடன் செல்லுபடியான LPA செய்வதற்கு மனநலத்திறனும் இருக்க வேண்டும்.
- சொத்து & அலுவல்கள் விவகாரங்களில் முடிவெடுக்க ஒரு டோனியை நியமனம் செய்வதாக யிருந்தால், நீங்கள் நொடிப்பில் உள்ளவராக இருக்கக் கூடாது.

LPA –ஐ பதிவு செய்ய விண்ணப்பம் செய்பவர், தெரிந்தே ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து பொய்யான வாக்குமூலம் கொடுப்பது குற்றவியல் சட்டத்தின்படி குற்றமாகும். இக்குற்றத்தை புரிவோர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டால் $10,000 வரை அபராதமோ 2 வருடம் வரை சிறை தண்டனையோ பெறலாம்.



## C2. இந்த செய்முறை எவ்வளவு காலம் பிடிக்கும்?

LPA - யை பதிவுச் செய்வதற்கான விண்ணப்பம் குறித்து OPG அறிக்கை விடுத்த தேதியிலிருந்து, கட்டாயமாக 6 வாரத்திற்கு காத்திருக்க வேண்டும்.இந்த காலகட்டத்தின் போது இந்த விண்ணப்பத்தைப் பற்றி தெரிவிக்கப்பட வேண்டிய டோனி/டோனிகள் அல்லது பெயர் குறிப்பிட்ட நபர்(கள்) ஆட்சேபங்களை எழுப்பலாம்.

இந்த சட்டத்தை அனுசரித்து LPA செய்யப்பட்டிருந்தால் அதோடு OPG-க்கு எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கப்படாவிட்டால் உங்கள் LPA 6 வாரத்திற்கு பிறகு பதிவு செய்யப்படும்.

## C3. LPA பதிவு செய்யப்பட்ட பிறகு செய்யவேண்டியவை

நீங்கள் உங்கள் மனநலத்திறனை இழக்க நேரிட்டால், உங்களுக்கு வேண்டிய முடிவுகளை எடுப்பதற்கு உங்கள் டோனி பயன்படுத்த வேண்டிய முக்கியமான பத்திரமே உங்கள் LPA – ஆகும்.

அசல் LPA–யை பத்திரமான ஒரு இடத்தில் நீங்கள் வைத்திருக்க வேண்டும் அதோடு உங்களுக்கு வேண்டிய முடிவுகளை எடுக்க தேவைப்பட்டால் உங்கள் டோனி அதை எளிதில் எடுத்துகொள்ளளும் வகையில் அதை வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் மனநலத்திறனை இழக்க நேர்ந்தால் உங்கள் டோனி/டோனிகளுடன் அலுவல் மேற்கொள்ளும் மக்களிடமும் அமைப்புகளிடமும் நீங்கள் ஒரு LPA–யை செய்துள்ளதைப்பற்றி தெரிவிக்கவேண்டும். இவர்களும் உள்ளடங்குவர்:

- உங்கள் மருத்துவர் மற்றும் ஏனைய சுகாதார பராமரிப்பு ஊழியர்கள்.
- உங்கள் வங்கி, மத்திய சேமநிதி கழகம் மற்றும் நீங்கள் கணக்கு வைத்திருக்கும் இதர அமைப்புகள் (எடுத்துக்காட்டாக மத்திய வைப்பகம் (பிரைவட்) லிமிட்டட், காப்புறுதி நிறுவனங்கள், பங்குச் சந்தை தரகர்கள).

வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு தேவைகள் உண்டு. நீங்கள் உங்கள் மனநலத்திறனை இழக்க நேர்ந்தால் உங்கள் டோனிகள் உங்களின் சார்பாக செயல்படுவார்கள். அவ்வாறு செயல்படும் டோனி/ டோனிகள் அவர்களுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அந்நபர்களுடைய தேவைகள் எவற்றையேனும் நீங்கள் நிரைவேற்ற வேண்டுமா என்பதை நீங்கள் அவர்களுடன் உறுதிச் செய்யவும்.

உங்களுடைய LPA –யை நீங்கள் இரத்துச் செய்தால் உங்கள் LPA –யை பற்றி தெரிவித்த நபர்களிடம் அது இரத்தானதைப் பற்றியும் நீங்கள் தெரிவிக்க வேண்டும். நீங்கள் உங்கள் மனநலத்திறனை இழக்க நேர்ந்தால் உங்கள் டோனி(கள்) உங்கள் LPA –யை பயன்படுத்துவதை தடுக்கும் பொருட்டு நீங்கள் இவ்வாறு செய்ய வேண்டும். உங்கள் அசல் LPA –யையும் அதன் பிரதிகளையும் இரத்துச் செய்வதற்காக, OPG – க்கு நீங்கள் அவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.

## C4. என் எல்பிஏ – யில் பெயர் குறிப்பிட்ட நபர் இருப்பதன் காரணம் என்ன?

உங்கள் LPA –யை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தைப் பற்றி தெரியப்படுத்துவதற்கு, நீங்கள் உங்கள் LPA –யில் ஒரு நபரை பெயர் குறிப்பிடலாம் (பெயர் குறிப்பிட்ட நபர் என்று அழைக்கப்படுவார்). இந்த நபர்(கள்) உங்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும் உங்கள் நிலைமையை நன்கு புரிந்து கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

பெயர் குறிப்பிட்ட நபர் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை என்றாலும் பெயர் குறிப்பிட்ட நபர் உங்கள் நலனுக்கு பாதுகாவலராக இருப்பார். ஆகவே, ஒரு நபரை பெயர் குறிப்பிடும்படி அறிவுறுத்தப்படுகிறீர்கள். பெயர் குறிப்பிட்ட நபருக்கு/நபர்களுக்கு உங்கள் LPA ஒழுங்காக செய்யப்படவில்லை என்று சந்தேகப்பட காரணம் இருந்தால், உங்கள் LPA பதிவு செய்யப்படுவதற்கு ஆட்சேபம் எழுப்பலாம்.

LPA –யை பதிவு செய்வதற்கான கட்டாய 6 வாரங்கள் காத்திருக்கும் காலக்கட்டத்திற்குள் இவ்வகையான ஆட்சேபங்களை OPG – யிடம் எழுப்பலாம்.

## C5. ஒருவர் எனது டோனியாக மறுக்கலாமா?

ஆமாம். ஒரு டோனியிடம் நீங்கள் அவரை நியமிக்கப் போவதை பற்றிய உங்களது எண்ணத்தை தெரிவிக்கவேண்டும், அதோடு அவர் LPA –யில் கையொப்பமிட்டு அவருடைய ஒப்புதலை வழங்கவேண்டும். ஒருவர் ஒப்புதல் வழங்கவில்லை என்றால் அவரை டோனியாக பெயர் குறிப்பிட கூடாது.



### C6. நீண்டகால அதிகாரப் பத்திரத்தை பதிவுச் செய்த பின்னர் நான் மனம் மாறினால் என்ன நடக்கும்?

a. நீங்கள் உங்களுடைய LPA–யை இரத்து செய்வதற்கு உங்களுக்கு மனநலத்திறன் இருந்தால் நீங்கள் அவ்வாறுச் செய்யலாம்.

b. LPA –யை பற்றி ஏற்கனவே தெரிவித்திருக்கும் உங்கள் டோனிகளுக்கும் மற்றும் வேறு நபர்கள் எவரேனுக்கும் அது இரத்து செய்யப்படுவதைப் பற்றி தெரிவிக்க வேண்டும்.

c. பொது காப்பாளருக்கு நீங்கள் LPA –யை இரத்து செய்ததைப் பற்றி தெரிவிக்கவேண்டும்.

d. LPA –யை இரத்து செய்வதற்கான நீதிமன்றத்தின் அதிகாரம்

- இந்த LPA –யை செய்ய உங்களை தூண்டுவதற்கு மோசடி அல்லது அளவுக்கு அதிகமான நெருக்குதல் பயன்படுத்தப்பட்டிருக்கிறதென்று நீதிமன்றம் நம்பினால், இந்த LPA –யை அது இரத்துச் செய்யலாம்.

உங்கள் LPA –யை நீங்கள் இரத்து செய்தால், அசல் LPA –யையும் பிரதிகள் இருந்தால் அவற்றையும் இரத்து செய்வதற்கு OPG –யிடம் கொண்டு செல்ல வேண்டும்.

### C7. ஒரு LPA செய்வதற்கு என்னென்ன கட்டணங்கள் உண்டு?

LPA -க்கான கட்டணங்களில் இவையும் உள்ளடங்கும்:

a. LPA சான்றிதழ் செய்வதற்காக, சான்றிதழ் வழங்குபவரிடம் செலுத்த வேண்டிய கட்டணம். இக்கட்டணத் தொகை சான்றிதழ் வழங்குபவரை பொறுத்து மாறுபடும்.

b. LPA –யை பதிவு செய்ய நீங்கள் OPG –க்கு கொடுக்க வேண்டிய விண்ணப்பக் கட்டணம். தயவு செய்து www.publicguardian.gov.sg என்ற இணைய பக்கத்திலுள்ள கட்டண பட்டியலைப் பார்க்கவும்.

# பகுதி D

## மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள 5 சட்டப்பூர்வ நெறிகள் யாவை? அவற்றை நான் எவ்வாறு பயன்படுத்தலாம்?

இச்சட்டப்பூர்வ நெறிகள் ஒரு தனி நபருக்கு முடிவெடுக்கும் நடவடிக்கையில் முடிந்தவரை பங்கெடுக்க உதவுவதோடு, அவ்வாறு செய்ய அவருக்குத் திறன் குறையும் போது அவருக்குப் பாதுகாப்பும் அளிக்கின்றன.

மனநலத்திறன் குறைப்பாடுள்ள ஒரு நபரின் சார்பாக செயல்படும்போது அல்லது முடிவுகள் எடுக்கும்போது, ஒவ்வொரு வழக்கிலும் ஏற்புடைய நடவடிக்கையை அல்லது முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்ய, இந்நெறிகளைச் சட்டத்திலுள்ள வழிவகைகளுடன் இணைத்து வாசிக்க வேண்டும்.

### நெறி 1: திறன் இருப்பதற்கான துணிபு

முடிவெடுக்க வேண்டிய சமயத்தில், ஒரு நபருக்கு அந்த முடிவை எடுக்கக்கூடிய திறன் இல்லை என்று ஆதாரம் இருந்தாலேயன்றி, அவருக்குச் சுயமாக முடிவெடுக்கும் திறன் உண்டென்றே கருதப்படவேண்டும்.

ஒரு நபரின் தோற்றம், வயது, நிலை அல்லது நடத்தையை அடிப்படையாகக் கொண்டு, அவரின் மனநலத்திறன் குறைப்பாட்டை மதிப்பிடக்கூடாது. ஆகவே, மக்கள் சுயமாக முடிவுகள் எடுக்கக்கூடிய சமயங்களில், அவர்கள் அவ்வாறு செய்வதை அனுமதிக்க வேண்டும்.

## கற்பனை காட்சியமைப்பு

விவாகரத்தான 66 வயது நிரம்பிய சாந்தி சாந்து, தாழ்வான மின் தூக்கியற்ற அறை–வீடொன்றில், தனியாக வசிக்கிறார். ஆறு மாதங்களுக்கு முன்பு, அவருடைய பிள்ளைகள் சாலை விபத்தொன்றில் துயரமாக மரணம் அடைந்தனர்.

சாந்தி சமூகத்தில் துடிப்புடன் செயல்பட்டு வந்தவர். அவர் பேட்டை நடவடிக்கைகளில் பங்கு கொள்வதோடு, வசிப்போர் குழு நடவடிக்கைகளில் தொண்டராய் இருந்து வந்துள்ளார். விபத்து நடந்ததிலிருந்து அவர் யாரிடமும் பேசுவதில்லை.

அந்த அறை–வீட்டு கட்டடத்தின் செயற்குழு, சுகாதார சொற்பொழிவு மற்றும் இலவச உடல் நல பரிசோதனை ஆகிய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில் பங்காற்றும் திறன் சாந்திக்கு இல்லை என்று குழு கருதியதால் சாந்தியை விலக்கிவைக்க சிந்திக்கிறது.

சாந்தி தனியாக வசிப்பதாலும் யாரிடமும் பேசாமலிருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று குழு அனுமானிக்கக்கூடாது. ஒரு நபருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று நிரூபிக்கப்படும்வரை அவருக்கு மனநலத்திறன் உண்டென்றே கருதப்பட வேண்டும். சாந்திக்கு அழைப்பு விடுப்பதை குழு எண்ணிப்பார்க்க வேண்டும். ஈடுபாடு காட்டுவதா இல்லையா என்பது சாந்தியின் விருப்பம்.

## நெறி 2: நடைமுறைக்கு ஏற்ற எல்லா உதவிகளையும் வழங்குவது

ஒரு குறிப்பிட்ட முடிவைச் செய்ய சிரமப்படக்கூடிய ஒரு நபரை கவனிக்கும் அல்லது அவருக்கு சிகிச்சை வழங்கும் பராமரிப்பாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், டோனிகள், துணை டோனிகள் மற்றும் தொழில்முறை நிபுணர்கள் ஆகியோர், அந்த நபர் சுயமாக முடிவெடுக்க உதவும் பொருட்டு, நடைமுறைக்கேற்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் ஆதரிக்கும் நபருக்கு முடிவெடுக்க உதவும் போது, அந்த நபரிடம் நெறுக்குதலைப் பயன்படுத்தவோ அல்லது சொந்த கருத்துகளைப் புகுத்தவோ கூடாது.

அந்த நபர் பெறக்கூடிய ஆதரவின் தன்மை, அவர் செய்ய வேண்டிய முடிவின் தன்மையையும் சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கிறது.

ஒரு நபர் பிறருடன் தொடர்புக் கொள்வதில் சிரமப்படுகிறார் என்ற காரணத்தினால் மட்டுமே, அந்த நபரின் சார்பாக இன்னொருவர் முடிவெடுக்கக்கூடாது. அதற்கு பதிலாக, பெரிய எழுத்துகள் மற்றும் வரைபடங்கள், மேலும் சைகை மொழி, பிரேல் (Braille), போன்ற பல்வேறு தொடர்புமுறைகளைப் பயன்படுத்தியும் ஒருவர் அந்த நபருக்கு உதவி செய்யலாம்.

## கற்பனை காட்சியமைப்பு

பல போலிஸ் அதிகாரிகள், நடுத்தர வயதுள்ள ஆடவர் ஒருவர், தீவு விரைவுச்சாலை மேம்பாலத்தின் அடியில் குடியிருப்பதைக் கண்டுப்பிடிக்கிறார்கள். அவர் மிகவும் அழுக்காகவும் அவர் காலில் சீழ் பிடித்த ஒரு பெரிய வெட்டு காயமும் இருக்கிறது. அவர்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

மருத்துவமனை ஊழியர்கள், அவரிடம் அவரது சொந்த விவரங்களையும் தொடர்புக் கொள்ளக்கூடிய உறவினர்களைப்பற்றியும் விசாரிக்கின்றனர். கேட்டதைப் புரிந்துக் கொண்டு அந்த ஆடவர் பதில் சொல்வதற்கு உதவியாக, இந்த கேள்விகள் பல மொழிகளில் கேட்கப்படுகின்றன. அந்த ஆடவர் மௌனமாக இருக்கிறார். அவருடையக் காயத்தைப் பரிசோதிக்க விரும்பும் மருத்துவருடன் ஒத்துழைக்க மறுக்கிறார்.

அவரது காயத்திற்குச் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால், அவர் தன் காலை இழக்க நேரிடும் என்று மருத்துவர் கூறுகிறார். நிலைமையை அவருக்கு விளக்குவதற்கு அந்த ஆடவரின் கால் மீது இரம்பம் கொண்டு அறுப்பதைப்போன்ற சைகையைச் செய்கிறார். அதன் பிறகு அந்த ஆடவர் கூடுதல் கவனம் செலுத்துவதைப்போன்று தோன்றுகிறது. அவர் தலையை ஆட்டிக்கொண்டே தன் வாயையும் காதுகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

அவர் காது கேளாத ஊமையாக இருக்கலாம் என்று ஒரு தாதி உணர்கிறார். ஆதலால், ஒரு தாளையும் பேனாவையும் அவருக்குக் கொடுத்து, சைகை மொழிபெயர்ப்பு தெரிந்த ஒருவரையும் வரவழைக்கிறார். அந்த ஆடவர் சமாதானம் அடைந்து, மருத்துவமனை ஊழியருடன் எழுத்து வழி தொடர்புகொள்ள தொடங்குகிறார்.

அந்த ஆடவரால் வாய்மொழிவழி உரையாட இயலாமல் இருந்திருக்கலாம். ஆனால், அதனாலேயே அவருடையச் சிகிச்சைப் பற்றிய முடிவை அவரால் எடுக்க முடியாது என்று அர்த்தமாகாது. அவர் ஒரு முடிவைச் செய்யவும் அந்த முடிவை எடுத்துச்சொல்லவும் தேவைப்படுகிற எல்லா நடைமுறைக்கேற்ற உதவிகளையும் கொடுப்பதற்கு முன்பே, சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்கும் மனநலத்திறன் அவருக்கு இல்லை என்று மருத்துவக் குழு முடிவெடுக்கக்கூடாது.

அவசர வேளைகளில், உதாரணத்திற்கு, விபத்தில் கடுமையான காயங்களுக்கு உள்ளான ஒருவர் சுயமாக முடிவெடுக்க உதவும் பொருட்டு இந்த அளவிற்கு முயற்சி எடுப்பது நடைமுறைக்கு சாத்தியமாகாது. என்ன நடக்கிறது, ஏன் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று அந்த நபருக்கு தெரிவிப்பது மட்டுமே அவர்களுக்கு சாத்தியப்படலாம்.

## நெறி 3: விவேகமற்ற முடிவு

ஒரு நபர் எடுக்கும் முடிவுகள் மற்றவர்களின் கண்ணோட்டத்தில் விவேகமற்ற முடிவுகளாகத் தோன்றினாலும், அவை அவருடைய முடிவுகள். தன் சொந்த முடிவுகளை எடுப்பதற்கான சுதந்திரம் அவருக்கு உண்டு. தன் சுய விருப்பங்களைத் தெரிவுச் செய்ய ஒருவருக்கு மன நலத்திறன் உண்டென்றால், அவர் அவ்வாறு செயல்படும் உரிமையை இது அங்கீகரிக்கிறது.

ஒருவர் எடுத்த முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அவர் தன் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று அர்த்தமாகாது.

ஆயினும், ஒருவர் விவேகமற்ற முடிவைச் செய்வதற்கும் (தீர்மானிக்கும் நபரே செய்யக்கூடிய முடிவு), ஒரு முடிவைச் செய்ய தேவைப்படும் தகவலை அந்த நபர் புரிந்துகொள்ள, நினைவுக்கூர அல்லது பயன்படுத்த இயலாத நிலையில் செய்யப்படும் முடிவிற்கும் ஒரு வேறுபாடுண்டு.

ஒரு நபரின் வழக்கமான நடத்தையைக் கருத்தில் கொண்டு, அவர் எடுக்கும் பல முடிவுகள் வழக்கத்திற்கு மாறாக இருந்தாலோ அல்லது அவர் எடுக்கும் முடிவினால் பிறர் அவரை எளிதில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவார்கள் என்றாலோ அல்லது அவருக்குத் தீங்கு விளைவிப்பார்கள் என்றலோ, அந்த நபரின் மனநலத் திறனை மதிப்பிட கூடுதல் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.

### கற்பனை காட்சியமைப்பு

ஆ ஹுவாட்டிற்கு 73 வயது. அவர் மனைவியை இழந்து தனியாக வாழ்ந்து வருகிறார்.

கடந்த வாரம் பவுள் என்ற ஜன்னல் பொருத்தும் வியாபாரி ஒருவர் ஆ ஹுவாட்டை அவரது வீட்டில் சந்தித்தார். கழிவறை ஜன்னல்கள் துருப்பிடித்திருப்பதால், அவற்றை மாற்ற வேண்டும் என்று பவுள் ஆ ஹுவாட்டிற்கு உணர்த்துகிறார். மறு தினம், பவுள், மீண்டும் ஆ ஹுவாட்டின் வீட்டிற்குச் சென்று ஆ ஹுவாட் தன் படுக்கை அறையின் ஜன்னல்களையும் மாற்ற வேண்டும் என்று அவருக்கு அறிவூட்டுகிறார். பவுள் இவற்றுக்கு ஆ ஹுவாட்டிடம் கட்டணமாக $500 செலுத்தும்படி கூறுகிறார்.

ஆ ஹுவாட்டின் மகன் ஆ செங், தன் தந்தையின் மீது கவலை கொள்கிறார். வேலை ஓய்வு பெற்றிருக்கும் ஆ ஹுவாட், வழக்கமாக தன் நிதி விவகாரங்களில் கவனமாக இருப்பவர்.

பவுள் மூன்றாவது முறையாக வருகிறார். அப்பொழுது, ஆ ஹுவாட் தன் வீட்டின் மற்ற ஜன்னல்கள் அனைத்தையும் $1500 – க்கு மாற்ற சம்மதிக்கிறார். ஜன்னல்களை முன்கூட்டியே பரிசோதித்த ஆ செங், ஜன்னல்கள் நல்ல நிலையில் இருப்பதையும், அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் இல்லாததையும் கவனித்தார். தன் தந்தையைப் பவுள் தனக்கு சாதகமாக பயன்படுத்துகிறார் என்று ஆ செங் நம்புகிறார். மேலும், இது போன்று பொருள்கள் வாங்கும் தீர்மானங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் ஆ ஹுவாட்டிற்கு உள்ளதா என்ற ஐயமும் அவர் மனதில் எழுகிறது.

நல்ல ஒரு விலை கிடைப்பதால், எல்லா ஜன்னல்களையும் ஒரே சமயத்தில் மாற்ற தான் விரும்புவதாக ஆ ஹுவாட் விளக்குகிறார். ஓரிரு வருடங்களில் எல்லா ஜன்னல்களையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் அவர் நம்புகிறார்.

தன் தந்தை ஆ ஹுவாட்டிற்கு 73 வயதாவதாலும், அவர் வீட்டின் எல்லா ஜன்னல்களையும் மாற்ற முடிவெடுத்திருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று ஆ செங் அனுமானிக்கக்கூடாது. ஆ ஹுவாட்டின் வழக்கமான போக்கில் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு, அது கவலை தரக்கூடியதாக இருந்தால், தன் தந்தையின் மனநலத்திறனை மருத்துவர் ஒருவர் மதிப்பீடுச் செய்வதை பற்றி ஆ செங் யோசித்துப் பார்க்க வேண்டும்.

## நெறி 4: மிகச் சிறந்த நலன்கள்

- மனநலத்திறன் குறைப்பாடுள்ள ஒரு நபரின் சார்பாக செய்யப்படும் செயல் அல்லது முடிவு ஒவ்வொன்றும், அவரது மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும்.

- செய்யப்படும் முடிவு, அந்த நபரின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டுள்ளதா என்பது வழக்கையொட்டிய சூழ்நிலைகளைப் பொறுத்திருக்கும்.

### கற்பனை காட்சியமைப்பு

கெவின் கூவிற்கும் அவரது மனைவி ரிஷிமா ராஜாவிற்கும் மூன்று பிள்ளைகள். அவர்களது மூத்த பிள்ளை, 23 வயதான ரோன் அறிவாற்றல் குன்றியவர். அவர் அற நிறுவனம் ஒன்று நடத்தும் புகலிடப்பட்டறை ஒன்றில் வேலைச் செய்து வருகிறார்.

இன்னும் சுதந்திரமாக வாழ்வதற்கு, வாழ்க்கைக்கு அவசியமான அடிப்படை திறன்களைக் கற்றுக்கொள்ள ரோன் போன்றோருக்கு தற்காலிக தங்குமிட வசதியையும் இந்த அற நிறுவனம் அளிக்கின்றது. பொது பொக்குவரத்தைப் பயன்படுத்தவும் அவர்களுக்கு ஓரளவு உதவியுடன் கற்பிக்கப்படுகிறது. இந்த வாழ்க்கைத் திறன்கள், திறந்த வேலை சந்தையில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு இவர்களை மேலும் உகந்தவர்களாக்க உதவுகிறது.

தங்குமிட வசதி திட்டத்தில் ஓர் இடம் இருப்பதால், அற நிறுவனத்தின் சமூக ஊழியர்கள் ரோன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சமூக ஊழியர்கள் எடுத்துரைக்கின்றனர்.

ரோன் மேலும் சுதந்திரமாக இருக்க விரும்புவார் என்று கெவின் மற்றும் ரிஷிமா இருவரும் அறிவார்கள். ஆயினும், ரோன் அந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டால், இனி அவர்களால் ரோனைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்ள முடியாமல் போவதோடு ரோன் அவர்களுடன் செலவிடும் நேரமும் குறையும் என்றும் அவர்கள் கவலைப்படுகின்றனர்.

தங்குமிட வசதி திட்டத்தைப்பற்றி ரோனிற்கு முடிவெடுக்கும் மனநலத்திறன் இருந்தால் கெவின், ரிஷிமா இருவரும் அவருக்காக அந்த முடிவை எடுக்கக்கூடாது. ஆனால் இந்த முடிவை எடுப்பதற்கு ரோனிற்குத் திறன் குன்றியிருந்தால் கெவின், ரிஷிமா இருவரும் ரோனின் மிகச் சிறந்த நலனை முன்னிட்டு செயல்பட வேண்டுமேயன்றி தங்களின் நலனுக்காக அல்ல.



## நெறி 5: குறைவான கட்டுப்பாடுகள்

மனநலத்திறன் குறைப்பாடுள்ளவர்களுக்காக செயல்படும்போது அல்லது முடிவெடுக்கும்போது, அந்த செயல் அல்லது முடிவு, குறைப்பாடுள்ளவரின் செயல்படும் உரிமை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு குறைவான கட்டுப்பாடுகளை விதிப்பவையாக இருக்க வேண்டும்.

குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட முடிவே பெரும்பாலும் அந்த நபரின் சிறந்த நலனைக் கருத்தில் கொண்ட முடிவாகவும் இருக்கும்.

எல்லா செயல்களும் அல்லது முடிவுகளும் ஒரு நபரின் மிகச் சிறந்த நலன்களுக்காகவே எடுக்கப்பட வேண்டும்.

**கற்பனை காட்சியமைப்பு**

ஆ மெய் என்பவர் டிமென்சியா எனும் நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தன் 80-வயது தாயார் திருவாட்டி குவாங் சியூ மோய்யுடன் வாழ்ந்து வருகிறார்.

ஆ மெய் வேலைக்குச் செல்லும் சமயங்களில் தன் தாயார் தன்னையே காயப்படுத்திக்கொள்ளாமல் இருக்கவும், வெளியே சுற்றி திரிந்து காணாமல் போகாதிருக்கவும், அவரை ஓர் அறையில் பூட்டி வைப்பார். அறையில் உணவும் தண்ணீரும் வைத்துவிடுவார். திருவாட்டி குவாங் பெரியோர்கான அணையாடை (டைபர்ஸ்) அணிந்திருப்பார்.

மாலையில் ஆ மெய் வீடு திரும்பியதும், தன் தாயைக் குளிப்பாட்டி உணவு ஊட்டுவார். ஆ மெய் தாயாரின் பாதுகாப்பின் மீது அக்கறைக் கொண்டு செயல்பட்டாலும், தன் தாய்க்கு ஒரு விசுவாசமான மகளாக இருந்தாலும், இவ்வகையான பராமரிப்பு, குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட ஒன்றல்ல. நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருப்போருக்கான பகல் நேர பராமரிப்பு நிலையத்தில் திருவாட்டி குவாங்கைச் சேர்க்க வேண்டும். அல்லது இதை போன்ற பொருத்தமான மற்ற பராமரிப்பு ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும்.



ஒன்றைவிட அதிகமான தெரிவுகள் உண்டென்றால், தெரிவுகளை சீர் தூக்கி பார்த்து, எடுக்கப்படும் முடிவு மிகச் சிறந்த நலன்கள் மற்றும் குறைவான கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

# பகுதி E

**LPA ஒன்றை பதிவுச் செய்வதற்கான ஒரு மாதிரி செயல்முறை சரிபார்த்தல் பட்டியல்**

LPA - யை நீங்கள் தயார் செய்தப் பிறகு நீங்கள் அல்லது உங்கள் டோனி/டோனிகள் அந்த LPA-யை பதிவுச் செய்ய OPG - யிடம் விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம். இவ்வாறு செய்யும் போது, விண்ணப்பத்தாரர்(கள்) கீழ் காணப்படும் சரி பார்த்தல் பட்டியலில் குறிப்பிடப்பட்டவைகளைச் செய்ய வேண்டும்:

| வ.எண் | நடவடிக்கைகள் | பூர்த்தியானது |
|---|---|---|
| 1 | பொது காப்பாளர் அலுவலகத்திலிருந்து, ' ஓர் ஆவணத்தை நீண்ட கால அதிகாரப் பத்திரமாக பதிவுச் செய்வதற்கான விண்ணப்பம்' என்ற பாரத்தைப் பெற்றுக் கொள்ளவும்/இணையத்திலிருந்து எடுக்கவும்.<br>(http://www.publicguardian.gov.sg) | ☐ |
| 2 | பதிவுச் செய்ய விண்ணப்பிக்கும் முன், அறிவிக்கப்பட வேண்டிய நபர்(கள்) எவரேனும் உண்டெனில், அறிவிக்கை/ அறிவிக்கைகளை அவர்/அவர்களிடம் அனுப்பவும். அறிவிக்கை பாரங்களை பொது காப்பாளர் அலுவலகத்திலிருந்து அல்லது அவர்களுடைய இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.<br>(http://www.publicguardian.gov.sg) | ☐ |
| 3 | விண்ணப்ப பாரத்தைப் பூர்த்திச் செய்யவும் | ☐ |
| 4 | கீழ்கண்டவையைக் கொண்டுவரவும்<br>- பூர்த்தி செய்யப்பட்ட எல்பிஏ விண்ணப்பப் பாரம்<br>- பூர்த்தி செய்யப்பட்ட எல்பிஏ<br>- டோனரின் அடையாள அட்டை (அசல்)<br>- டோனிகளின் அடையாள அட்டைகள் (அடையாள அட்டைகளின் முன் மற்றும் பின்பக்கங்களின் பிரதிகள்)<br>- ஒவ்வொரு டோனியின் பாஸ்போர்ட் அளவு புகைபடம் ஒன்று<br>- பதிவு கட்டணத்தைச் செலுத்தவும்.<br>நீங்கள் ரொக்கமாக, நெட்ஸ் வழி, கடன் அட்டை வழி (விசா அல்லது மாஸ்டர் கார்ட்) அல்லது 'AG/MCYS' என்ற கட்டணம் பெறுனருக்கு உள்நாட்டு நாணயத்தில் காசோலை வழி கட்டணத்தைச் செலுத்தலாம். | ☐ |

## விளக்கச் சொற்கள்

### பராமரிப்பு அல்லது சிகிச்சை தொடர்பான செயல்கள்

இப்பணிகள், பராமரிப்பாளர்கள் (ஊதியம் பெறும்/பெறாத), சுகாதார பராமரிப்பு அதிகாரிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரால், சம்மதம் தெரிவிக்க திறன் குன்றிய நபர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றன. இவை சுய பராமரிப்பு, சுகாதார பராமரிப்பு அல்லது மருத்துவ சிகிச்சை ஆகியவற்றோடு சம்மந்தப்பட்டவையாகும்.

### மிகச் சிறந்த நலன்கள்

மனநலத்திறனை இழந்தவரின் சார்பாக ஒரு முடிவை எடுக்கும் முன்பு, அவருக்கு எது சிறந்தது என்று சுட்டிக் காட்டும் காரணிகளைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய கடமை முடிவெடுப்போருக்கு உள்ளது. மேலும் தகவல் பெற சட்ட நடைமுறை விதித் தொகுப்பின் (Code of Practice) 6–ஆம் அத்தியாயத்தைக் காண்க.

### சட்ட நடைமுறை விதித் தொகுப்பு

சட்ட நடைமுறை விதித் தொகுப்பு சட்டத்தை ஆதரிப்பதோடு நடைமுறையில் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற விளக்கத்தையும் வழங்குகிறது.

### தனியாள் குழு அல்லது சொத்துப் பொறுப்புக் குழு

மனநலக் கோளாறினால் அவதிப்படும் ஒருவரின் சார்பாக குறிப்பிட்ட முடிவுகளை எடுப்பதற்கு நீதிமன்றம் இக்குழுக்களை மனநோய்கள் மற்றும் சிகிச்சை (இப்போது இரத்தாக்கப்பட்டுவிட்ட) சட்டத்தின் கீழ் நியமித்தது. இப்பொழுதுள்ள குழுக்களில் சேவைபுரியும் நபர்கள் மனநலத்திறன் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட டெப்யூட்டிகள் போலவே உடனடியாக செயல்படுவார்கள். தனியாள் குழு மற்றும்/அல்லது சொத்துப் பொறுப்புக் குழுவில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே அதிகாரமும் கடமைகளும் இங்கேயும் அவர்களுக்கு உண்டு.

### முடிவெடுப்பவர்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களின் சார்பாக முடிவுகளைச் செய்யும் ஒரு தனியாள் அல்லது ஒரு நபர் ஆகியோர் முடிவெடுப்பவர்களாவர்.இவற்றில் பராமரிப்பாளர்கள், தாதிகள், மருத்துவர்கள், நிரந்தரமாக செயல்படும் அதிகார பத்திரத்தின் (LPA) அறங்காவலர்கள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட துணை அறங்காவலர்கள் (டெப்யூட்டி) ஆகியோர் அடங்குவர்.

### துணை அறங்காவலர்

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் சார்பாக குறிப்பிட்ட முடிவுகள் எடுக்க ஒரு துணை அறங்காவலர் நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார். மனநலத்திறன் குறைபாடு ஏற்பட்டுள்ளவர் நீண்டகால அதிகாரப் பத்திரத்தைச் செய்யவில்லை என்றாலோ அவரது சார்பாக அம்முடிவுகளை எடுக்க ஒரு அறங்காவலர் இல்லையென்றாலோ நீதிமன்றம் இந்நியமனத்தைச் செய்கிறது. மனநலத்திறன் விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டதன் பிரகாரம், அறங்காவலர் ஒரு தனியாளாகவோ உரிமம் பெற்ற பொறுப்பாண்மை நிறுவனமாகவோ அல்லது பொறுப்பாண்மை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 336) விலக்களிக்கப்பட்ட நபராகவோ இருக்கலாம்.

### அறங்காவலர் (டோனி)

தங்களுக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் போது தங்களின் சார்பாக தங்களின் சுய நலனைப் பற்றி மற்றும்/அல்லது சொத்து & அலுவல் விவகாரங்களைக் குறித்து செயல்படவும் முடிவுகளை எடுக்கவும் தனி நபர்களால் நியமிக்கப்படுபவர்களே அறங்காவலர்கள்.

### அதிகாரம் அளிப்பவர் (டோனர்)

ஒரு நாள் தான் மனநலத்திறனை இழந்துவிட்டால் தன் விவகாரங்களைக் கவனித்துக்கொள்ள அறங்காவலர்களை நியமிக்க LPA ஒன்றைச் செய்பவரே டோனர் என்பவராவார்.

### கூட்டாக

அறங்காவலர்கள் அல்லது துணை அறங்காவலர்கள் தனித்து செயல்படாமல் கூட்டாக இணைந்து செயல்பட வேண்டும்.

### நீண்டகால அதிகாரப் பத்திரம் (எல்பிஏ)

இது ஒரு சட்டம் சார்ந்த பத்திரம். இது, டோனர் தன்னிச்சையாக டோனி என்று அழைக்கப்படும் இன்னொருவரை நியமிக்க அனுமதியளிக்கிறது. டோனர் மனநலத்திறன் குறைபாட்டினால் தானே முடிவுகள் செய்ய முடியாத நிலையில் இருக்கும் போது அவரது சார்பாக செயல்படவோ முடிவுகள் எடுக்கவோ டோனிக்கு அதிகாரங்களையும் அல்லது உரிமையையும் இப்பத்திரம் வழங்குகிறது.

### மனநலத்திறன்

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுக்க ஒரு நபருக்குள்ள ஆற்றலே மனநலத்திறன் என்பதாகும்.

### மனநலத்திறன் சட்டம்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களைக் பாதுகாக்க இது பாதுகாவல்கள் அளிக்கிறது. இச்சட்டம் பொது காப்பாளருக்கு (Public Guardian) கண்காணிப்பு மற்றும் புலனாய்வு அதிகாரங்களை வழங்குகிறது. அதோடு மனநலத்திறன் குறைபாடுள்ளவர்கள் தங்களின் பராமரிப்பாளர்கள் மற்றும் முடிவெடுப்போர்களால் துன்புறுத்தப்படுவதையும் ஒரு குற்றச் செயலாக்குகிறது. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் சார்பாக குறிப்பிட்ட முடிவுகள் செய்யப்படுவதையும் சட்டம் தடைசெய்கிறது.

### பொது காப்பாளர் அலுவலகம் (ஓபிஜி)

மனநலத்திறன் சட்டத்தின் கட்டமைப்பில் பொது காப்பாளரின் அலுவலகத்திற்குப் பரந்தகன்ற பொறுப்புகள் உள்ளன. இவற்றில், நீண்டகால அதிகாரப் பத்திர பதிவேட்டை நிர்வகிப்பது, டெப்யூட்டிகளை மேற்பார்வையிடுவது மற்றும் துன்புருத்தலைப் பற்றிய குற்றச்சுமத்தல்களைப் புலன் விசாரணை செய்வது.

### சட்டப்பூர்வ நெறிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள அல்லது திறன் குறைபாடு ஏற்படக்கூடியவர்களைக் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் போது 5 சட்டப்பூர்வமான நெறிகளை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். மேல் விவரங்களுக்குப் பகுதி D– யைப் பார்க்கவும்.

### விவேகமற்ற முடிவு

இது சட்டப்பூர்வ நெறிகளில் ஒன்றை குறிக்கிறது. மனநலத்திறன் உள்ள ஒரு நபருக்கு, மற்றவர் நோக்கில் விவேகமற்றது என்று புலப்படும் ஒரு முடிவை எடுக்கும் உரிமை உள்ளது. எடுக்கப்படும் முடிவு விவேகமற்றது என்பதால் அந்நபர் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று பொருள்படாது. மேல் விவரங்களுக்குப் பகுதி D– யைப் பார்க்கவும்.

பொது காப்பாளர் அலுவலகம்
சமூக வளர்ச்சி இளையர் மற்றும் விளையாட்டு அமைச்சு
510 தாம்சன் சாலை, #16-01, SLF கட்டடம், சிங்கப்பூர் 298135
தொலைபேசி: 1800 226 6222 தொலை பிரதி: (65) 6258 3512
மின்னஞ்சல்: enquiry@publicguardian.gov.sg
www.publicguardian.gov.sg என்ற எங்களின் இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

**ISBN : 978-981-08-5539-0**

**1** முதல் பதிப்பு
அச்சிடப்பட்டது **:** மெ **2010**

OFFICE OF THE
**PUBLIC GUARDIAN**

MCYS